# பால்வளத்துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு 2012–2013

## 1. முன்னுரை

உலகிலேயே அதிக கறவை மாடுகள் உள்ள நாடு இந்தியா. பால்பெருக்குத் திட்டங்கள் செயல்படுத்தியதால் இந்தியா உலகிலேயே அதிகமான பால் உற்பத்தி செய்யும் நாடாக விளங்குகிறது. பால் உற்பத்தி செய்யும் முன்னணி மாநிலங்களில் ஒன்றாக தமிழகம் விளங்குகிறது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தொலைநோக்குத் திட்டமான இரண்டாவது ‘வெண்மை புரட்சியை’ தமிழகத்தில் உருவாக்குவதன் மூலம் பால் உற்பத்தியை பல மடங்கு அதிகரித்து, பால் உற்பத்தியில் வளர்ச்சியை ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் உற்பத்தியாகும் பாலில் சராசரியாக 12 சதவிகிதம் பால் கிராம பால் உற்பத்தியாளர்களின் சுய தேவைக்கு பயன்படுத்தப்படுகிறது. 49 சதவிகிதம் பால் அமைப்பு சாரா பிரிவினர்கள் மூலமும், எஞ்சியுள்ள 39 சதவிகிதம் பால் அமைப்பு சார் நிறுவனங்கள் மூலமும் கையாளப்படுகிறது. இதில் பால் கூட்டுறவு சங்கங்கள்

நாளொன்றுக்கு 24 இலட்சம் லிட்டர் முதல் 29 இலட்சம் லிட்டர் வரை கொள்முதல் செய்கிறது. கிராமப்புறங்களில் கறவை மாடுகளின் பால் உற்பத்தியை அதிகரிக்கவும், அதன் வாயிலாக சங்கங்களின் பால் உற்பத்தியை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பால் உற்பத்தியாளர்கள் பால் உற்பத்தி தொழிலின் முதுகெலும்பாக உள்ளனர். பால் உற்பத்தியாளர்களுக்கு இடுபொருள் வழங்குதல், கால்நடைத் தீவனம் வழங்குதல், கொள்முதல் செய்யும் பாலுக்கு உரிய விலை வழங்குதல் ஆகியவற்றிற்கு அரசு உதவி அளிப்பதுடன் பால் உற்பத்தியை அதிகரிக்கவும் உதவி வருகிறது.

பால் உற்பத்தியாளர்களுக்கு பால்பணத்தை உரிய நேரத்தில் பட்டுவாடா செய்வதற்கு அரசு முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. மாவட்ட ஒன்றியங்கள் பால் உற்பத்தியாளர்களுக்கு பால்பணம் பட்டுவாடா உரிய நேரத்தில் தர இயலாதபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 115.85 கோடி ரூபாய் நிதி உதவி வழங்கி பால்பணம் பட்டுவாடா நிலுவையின்றி வழங்க உதவியுள்ளார்கள்.

பால் உற்பத்தியாளர்களுக்கு கால்நடை தீவனம் தங்கு தடையின்றி வழங்கவும், புதிய கறவை மாடுகள் வாங்க

கடன் உதவி வழங்கவும், உறுப்பினர்கள் பால் பண்ணை அமைக்கவும் மாவட்ட ஒன்றியங்கள் விரைவுபடுத்தப் பட்டுள்ளன. இப்பணிகளை நிறைவேற்றவும், விவசாய பெருமக்களுக்கு பணியாற்றிடவும் பால் உற்பத்தியை பெருக்கவும் பால்பெருக்குத்துறை அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

## 2. பால்வளத்துறையின் குறிக்கோள்கள்

1. பால் உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்யும் பாலுக்கு ஆதாயமான விலை கிடைக்க வழி செய்தல்.
2. பால் உற்பத்தியை மேம்படுத்த பால் உற்பத்தியாளர்களுக்கு இடுபொருள் மற்றும் கால்நடை மருத்துவ உதவி அளித்தல்.
3. அமைப்புசாரா பால் தொழிலை ஒருங்கிணைந்த அமைப்புசார் தொழிலாக மாற்றப் படிப்படியாக நடவடிக்கை மேற்கொள்ளுதல்.
4. பால்பண்ணை செயல்பாடுகளை கண்காணித்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்.
5. நுகர்வோருக்கு பதப்படுத்தப்பட்ட, தூய மற்றும் உணவு பாதுகாப்பு வழிமுறைகளின்படி

தயாரிக்கப்பட்ட தரமான பால் எப்பொழுதும் நியாயமான விலையில் கிடைக்கச் செய்தல்.

6. நிர்ணயிக்கப்பட்ட தரக்குறியீட்டுடன் சரியான அளவுகளில் பால் மற்றும் பால் பொருட்கள் கிடைக்க செய்தல்.
7. பால்பண்ணைத் தொழில், இதர தொழில்களின் வளர்ச்சிக்கு நிகராக தொடர்ந்து வளர்ச்சியடைய உறுதி செய்தல்.
8. கறவை மாடுகளுக்குத் தேவையான கலப்புத் தீவனம் மற்றும் பசுந்தீவனம் கிடைத்திட உரிய முயற்சிகளை மேற்கொள்ளுதல்.
9. பல்வேறு பால்பண்ணை செயல்பாடுகளில் நவீனமுறை தொழில் நுட்பங்களை புகுத்துதல்.

## 2.1. குறிக்கோள்களை நிறைவேற்ற பின்பற்றப்படும் நடவடிக்கைகள்

பால்வளத்துறையின் குறிக்கோள்களை நிறைவேற்றிட கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

1. தரப் பரிசோதனை மூலம் கிராம அளவில் தூய பால் உற்பத்தி திட்டத்தை பலப்படுத்துதல்.

2. கூட்டுறவுத் துறையின்கீழ் செயல்படும் பால்பண்ணைகளின் செயல்பாடுகள் மேம்படுத்துதல் மற்றும் பதப்படுத்தும் திறனை அதிகரித்தல்.
3. சுகாதாரமான தூய பால் மற்றும் பால் உபபொருட்களை தயாரித்து நுகர்வோருக்கு வழங்க உணவு பாதுகாப்பு முறையினை பால்பண்ணைத் தொழிலில் உறுதி செய்தல்.
4. கூட்டுறவு அமைப்பிலுள்ள பால் உற்பத்தியாளர்களுக்கு சொந்தமான கறவை மாடுகளுக்கு இலவச மருத்துவ சிகிச்சை, செயற்கைமுறை கருவூட்டல் வசதிகளை அமுல்படுத்துதல், கலப்புத்தீவனம் வழங்குதல், பசுந்தீவன வளர்ப்பு மற்றும் காப்பீடு திட்டத்தினை பால் உற்பத்தியாளர்களின் அனைத்து கால்நடைகளுக்கும் கிடைக்க வழிவகை செய்தல்.
5. தமிழகத்தில் பால்வள மேம்பாட்டிற்கான மத்திய / மாநில அரசின் நேரடி மற்றும் பங்களிப்பு திட்டங்களை செயல்படுத்துதல்
6. ஒளிவு மறைவு அற்ற நிர்வாகத்திற்காக மின் ஆளுமை முறையினை ஊக்குவித்தல்.

## 3. பால்வளத்துறை

### 3.1. நிர்வாக அமைப்பு

தமிழகத்தில் 1958 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட பால்வளத்துறையின் இன்றைய வளர்ச்சி, சிறப்பானதும் மற்றும் குறிப்பிடத்தக்கதுமாகும். பால் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகம் மற்றும் சட்டரீதியான செயல்பாடுகள், 01.08.1965 முதல் பால்வளத்துறைக்கு மாற்றப்பட்டது. பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை ஆணையர், இத்துறையின் தலைவராவார். பால் கூட்டுறவுச் சங்கங்களின் செயல் பதிவாளராகவும் மற்றும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் நிர்வாக இயக்குநராகவும் இத்துறை ஆணையர் செயல்பட்டு வருகிறார்.

புதிய சங்கங்களை பதிவு செய்தல், செயலிழந்த சங்கங்களை புதுப்பித்தல், சங்கங்களை ஆய்வு செய்தல், தகராறுகளின் மீது நடவடிக்கை எடுத்தல், தேர்தல் நடத்துதல், நிர்வாகக் குழு அமைத்தல் மற்றும் பொது மக்களின் நலன் கருதி சங்கங்களுக்கு ஆணைகள் பிறப்பித்தல் போன்ற நடவடிக்கைகளை, தமிழ்நாடு

கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983 மற்றும் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள் 1988 ஆகியவற்றின்படி ஆணையர் செயல்பட்டு வருகிறார்.

பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை ஆணையர் அவர்களின் சட்டரீதியான கூட்டுறவுப் பணிகளை மண்டல அளவில் நடைமுறைப்படுத்துவதற்கு, துணை பால் ஆணையர் (கூட்டுறவு) மற்றும் மாவட்ட வாரியாக நியமிக்கப்பட்டுள்ள 24 துணை பதிவாளர்கள் (பால்பதம்) ஆகியோர் உதவியாக உள்ளனர்.

## 3.2 தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்

தமிழகத்தில் 1958 ஆம் ஆண்டு பால்வளத்துறை துவக்கப்பட்டது. 1972 ஜூலை மாதம் முதல் பால்வளத்துறையின் வியாபார நடவடிக்கைகள் தமிழ்நாடு பால்வள நிறுவனத்திற்கு மாற்றப்பட்டது. அதனை தொடர்ந்து 01.02.1981 முதல் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்பட்டது.

பால்வளத்துறையின் திட்டங்கள் அனைத்தும் குஜராத் ஆனந்த் மாதிரி முறையில் வடிவமைக்கப்பட்ட கூட்டுறவு சங்கங்களின் அமைப்பு மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பால்பண்ணை கட்டமைப்பானது, கிராம அளவில் பிரதம கூட்டுறவு சங்கங்களாகவும், மாவட்ட அளவில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களாகவும், மாநில அளவில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையமாகவும் மூன்றடுக்கு முறையில் செயல்பட்டு வருகிறது.

பால் கூட்டுறவின் வணிகச்சின்னம் ‘ஆவின்’ என்பதாகும். இணையத்தின் நான்கு பால்பண்ணைகள் சென்னையில் செயல்பட்டு வருகின்றன. மாநகர பால்பண்ணைகள் கூட்டுறவு ஒன்றியங்களிலிருந்து பாலினை பெற்று பதப்படுத்தி, பால் பைகளில் நிரப்பி சென்னை மாநகரம் மற்றும் புறநகர் பகுதிகளுக்கு விற்பனைக்கு அனுப்பி வைக்கின்றன.

சென்னை மற்றும் மாவட்டங்களில் ஆண்டுக்கு ஆண்டு பாலின் விற்பனை சீராக அதிகரித்து வருகிறது. தமிழக நுகர்வோர்களிடையே பால் கூட்டுறவுகளின் பால்

உபபொருட்கள் மிகுந்த வரவேற்பு பெற்றுள்ளன. அம்பத்தூரில் பால் உபபொருட்களுக்கென தனியாக நிறுவப்பட்டுள்ள பால்பண்ணையில் பால் உபபொருட்கள் தயாரிக்கப்படுகின்றன.

**அட்டவணை – 1**
**மாநகர பால்பண்ணைகள்**

| பால்பண்ணை பெயர் | செயல்பாடுகள் | கொள்திறன் ( நாளொன்றுக்கு லிட்டரில்) |
|---|---|---|
| மாதவரம் | பால் பதப்படுத்துதல் | 2,00,000 |
| அம்பத்தூர் | பால் பதப்படுத்துதல் | 4,00,000 |
| சோழிங்க நல்லூர் | பால் பதப்படுத்துதல் | 4,00,000 |
| அம்பத்தூர் உபபொருட்கள் பால்பண்ணை | பால் உபபொருட்கள் உற்பத்தி | 10,000 |

## 3.3. மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள்

தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கி, 17 மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள் செயல்பட்டு வருகின்றன. தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மாவட்ட ஒன்றியங்களின் உறுப்பினர்களாக செயல்படுகின்றன. மாவட்ட பால் கூட்டுறவு ஒன்றிய தலைமை அலுவலகம்

அமைந்துள்ள மாவட்டத்தின் ஆட்சித்தலைவர் அந்த ஒன்றியத்தின் தனி அலுவலராக செயல்படுகிறார்.

தூய பால் உற்பத்தி வழிமுறைகளைப் பின்பற்றி, சங்கங்களில் பால் கொள்முதல் செய்தல், தரத்தின் அடிப்படையில் பால்பணம் வழங்குதல், கால்நடைகளுக்கான இடுபொருள் உதவி வழங்குதல், கால்நடைகளின் நலம் பேணுதல், கால்நடைத் தீவனம் மற்றும் பசும்புல் கரணைகள் வழங்குதல், பால் உற்பத்தியாளர்கள் நலனைக் கருத்தில் கொண்டு மாநில மற்றும் மத்திய அரசுத் திட்டங்களை மாவட்ட அளவில் செயல்படுத்துதல், உபரிப் பாலிலிருந்து கொழுப்பு நீக்கிய மதிப்புக் கூட்டிய பால் உபபொருட்கள் தயாரித்தல், பால் மற்றும் பால் உபபொருட்கள் பெருநகர பால் விற்பனை நிலையங்கள் மூலமும் உள்ளூர் பால் விற்பனை நிலையங்கள் மூலமும், விற்பனை செய்வது ஆகியவை மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்களின் முக்கிய பணிகளாகும்.

அட்டவணை –2

மாவட்ட ஒன்றியங்களின் கையாளும் திறன்

| வ. எண் | ஒன்றியத்தின் பெயர் | ஆரம் –பித்த வருடம் | அனுமதிக்கப் –பட்ட கையாளும் திறன் (நாளொன்-றுக்கு லிட்டரில்) | பால் குளிரூட்டும் நிலையங்கள் எண் –ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் – திருவள்ளூர் | 1979 | 1,10,000 | 2 |
| 2 | விழுப்புரம் | 1982 | 3,00,000 | 2 |
| 3 | வேலூர் | 1982 | 3,80,000 | 4 |
| 4 | தர்மபுரி | 1982 | 2,50,000 | 2 |
| 5 | சேலம் | 1978 | 5,00,000 | 3 |
| 6 | ஈரோடு | 1975 | 4,50,000 | 3 |
| 7 | கோயம்புத்தூர் | 1979 | 2,50,000 | 4 |
| 8 | நீலகிரி | 1982 | 50,000 | 1 |
| 9 | மதுரை | 1983 | 2,00,000 | 1 |
| 10 | திண்டுக்கல் | 1987 | 1,50,000 | 2 |
| 11 | திருச்சி | 1980 | 3,30,000 | 3 |
| 12 | புதுக்கோட்டை | 1985 | | |
| 13 | தஞ்சாவூர் | 1982 | 50,000 | 1 |
| 14 | சிவகங்கை | 1982 | 74,000 | 2 |
| 15 | விருதுநகர் | 1985 | 60,000 | 1 |
| 16 | திருநெல்வேலி | 1982 | 1,00,000 | 4 |
| 17 | கன்னியாகுமரி | 1982 | 20,000 | 0 |
| | மொத்தம் | | 32,74,000 | 35 |

புதுக்கோட்டை ஒன்றியத்தில் **20.4.1986**ல் பால் பெருக்குத் திட்டத்தின் வாயிலாக குளிரூட்டும் நிலையம் அமைக்கப்பட்டது. இந்நிலையம், **16.10.1993** வரை செயல்பட்டது. குளிரூட்டும் நிலையம் முழுத்திறனுடன் செயல்பட இயலாத காரணத்தால் மூடப்பட்டது. அது முதல் இம்மாவட்டத்தில் உற்பத்தியாகும் பால் அருகிலுள்ள திருச்சி ஒன்றியத்திற்கு அனுப்பி பதப்படுத்தபட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

மீண்டும் புதுக்கோட்டை ஒன்றியத்தில், குளிரூட்டும் நிலையத்தைப் பால் பண்ணையாக மாற்றி நல்ல நிலையில் இயங்கவைக்கத் திட்டமிடப்பட்டு தீவிர பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் **2.99** கோடி ரூபாய் செலவில் உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகள் முடிவுபெற்றபின் புதுக்கோட்டை ஒன்றியத்தில் பால் பண்ணை செயல்படத் துவங்கும்.

**3.4 கிராம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள்**

தமிழகத்தில் தற்போது கிராம அளவில் **9231** பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றுள் மகளிரால் நடத்தப்படும் **1491**

கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களும் அடங்கும். மேலும் நுகர்வோர் பயனடையும் வகையில் 62 பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களும் உள்ளன. தற்போது 4.19 இலட்சம் பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களுக்கு பால் வழங்கி வருகின்றனர். சங்கம் இலாபம் ஈட்டும் போது பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் பால் வழங்கும் உறுப்பினர்களுக்கு பங்கு மூலதனத்தில் ஈவுத்தொகை, பூரிப்புத்தொகை மற்றும் கூடுதல் கொள்முதல் விலை ஆகியன வழங்கப்படுகின்றன.

**அட்டவணை – 3**

**ஒன்றிய வாரியாக சங்கங்கள் மற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கை**

| வ. எண் | ஒன்றியத்தின் பெயர் | சங்கங் களின் எண்ணிக்கை | பால் வழங்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் – திருவள்ளூர் | 410 | 12,110 |
| 2 | விழுப்புரம் | 817 | 34,726 |
| 3 | வேலூர் | 1,130 | 91,341 |
| 4 | தர்மபுரி | 611 | 25,779 |
| 5 | சேலம் | 1,262 | 48,695 |
| 6 | ஈரோடு | 738 | 38,470 |
| 7 | கோயம்புத்தூர் | 679 | 21,647 |
| 8 | நீலகிரி | 95 | 4,609 |

| | | | |
|---|---|---|---|
| 9 | மதுரை | 972 | 22,854 |
| 10 | திண்டுக்கல் | 293 | 7,401 |
| 11 | திருச்சி | 732 | 52,832 |
| 12 | தஞ்சாவூர் | 253 | 20,513 |
| 13 | புதுக்கோட்டை | 73 | 4,240 |
| 14 | சிவகங்கை | 437 | 8,520 |
| 15 | விருதுநகர் | 132 | 4,361 |
| 16 | திருநெல்வேலி | 495 | 15,469 |
| 17 | கன்னியாகுமரி | 102 | 5,480 |
| | மொத்தம் | 9,231 | 4,19,047 |

### 3.5 தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம்

பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை ஆணையர் அவர்களின் கட்டுப்பாட்டில் தரக்கட்டுப்பாடு ஆய்வகம் சென்னை, மாதவரத்தில் இயங்கி வருகிறது. பால் மற்றும் பால் உபபொருட்கள் மாதிரிகள் சோதனை செய்யப்பட்டு தரமான பால் நுகர்வோருக்கு விநியோகம் செய்வது உறுதி செய்யப்படுகிறது. இது தவிர, ஒவ்வொரு பால்பண்ணையிலும் தகுதி பெற்ற அலுவலர்களை கொண்டு ஒரு தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம் செயல்பட்டு வருகிறது. இந்த ஆய்வகங்கள் பால் மற்றும் பால் உபபொருட்கள் பெறப்படும் மற்றும் விநியோகிக்கப்படும் இடங்களில் தரத்தினை ஆய்வு செய்து

உறுதிப்படுத்துகின்றன. சென்னையில் நடமாடும் தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம் ஒன்றும் செயல்பட்டு வருகிறது. சென்னை மாதவரத்தில் இயங்கி வரும் தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம், பால் உப பொருட்களை ஆய்வு செய்யவும், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு ஆய்வகமாகவும் செயல்படும். இந்த ஆய்வகம், பால் உப பொருட்களில் தேவையான சத்துக்களை அளவிட்டு அதன் அடிப்படையில் புதிய பால் உபபொருட்களை அறிமுகப்படுத்த உதவும்.

**3.6 உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய சட்டம் 2006**

பால் மற்றும் பால் உபபொருட்களின் ஆணை 1992ன்படி, ஆணையர், பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை அவர்கள் மாநில அளவில் மாநில பதிவு அதிகாரியாக செயல்பட்டார். மேலும் ஆணையர் அவர்கள் பால் மற்றும் பால் உபபொருட்களின் ஆணையை நடைமுறைப்படுத்தவும் மற்றும் மாநில அளவில் பால்பண்ணை செயல்பாடுகளை கட்டுப்படுத்தவும் அதிகாரம் உடையவர். ஆனால், 5.8.2011 முதல் உணவுப் பாதுக்காப்புச் சட்டம் 2006, மத்திய அரசால் அமுல்படுத்தப்பட்டபின் பால் மற்றும் பால் உபபொருட்கள் உட்பட அனைத்து உணவுப்பொருட்களும் மத்திய அரசால் அனுமதிக்கப்பட்ட

உணவுப் பாதுகாப்பு ஆணையர் அவர்களின் அதிகாரத்திற்கு உட்படுத்தப் பட்டுள்ளது.

## 4.0 பால் உற்பத்தியாளர் நலன் மற்றும் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கான ஊக்குவிப்பு நடவடிக்கைகள்

கூட்டுறவு சங்கங்களுக்கு பால் வழங்கும் தற்போதைய 4.19 இலட்சம் பிரதம சங்க பால் உற்பத்தியாளர்களுக்கு பால்பணம் பட்டுவாடா செய்யப்படுவதுடன் அவர்களுடைய கால்நடைகளுக்கு நோய்ப்பாதுகாப்பு, செயற்கை முறை கருவூட்டல், காப்பீடு, கால்நடைத் தீவனங்கள் வழங்குதல் மற்றும் பல்வேறு திட்டங்களின் மூலம் கறவை மாடு வாங்குவதற்கான கடன் வசதி செய்து கொடுத்தல் போன்ற வசதிகளும் செய்யப்பட்டு வருகிறது.

கடந்த 2011–2012 ஆம் ஆண்டில் பால் உற்பத்தியாளர்களுக்கு கீழ்க்கண்ட நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன:-

1. 1460 பிரதம பால் கூட்டுறவு சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன.

2. பால் உற்பத்தியாளர்களின் கறவை மாடுகளுக்கு தேவையான தாதுஉப்புக்கலவை வழங்கும் நோக்கத்தில் ஈரோடு, திருச்சி, விழுப்புரம் மற்றும் திருநெல்வேலி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் தாது உப்புக்கலவை தயாரிக்கும் ஆலைகள் நிறுவப்பட்டுள்ளன.
3. நீலகிரி மாவட்டத்தில் உள்ள ஜெர்சி பொலிகாளை பண்ணையில் 17.69 இலட்சம் உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்து தரமான செயற்கைமுறை கருவூட்டல் செய்ய வழங்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் சர்வதேச தரச்சான்று பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.
4. கடந்த 2011–2012 ஆம் ஆண்டில் சங்க பால் உற்பத்தியாளர்களுக்கு பங்கு ஈவு மற்றும் ஊக்கத்தொகையாக ரூ.10.21 கோடி வழங்கப்பட்டுள்ளது. மேலும், மாவட்ட பால் கூட்டுறவு ஒன்றியங்கள் ஈட்டிய இலாபத்தை உறுப்பினர்களுக்கு உபரிப் பணமாக வழங்கி வருகின்றன.

5. மொத்த பால் தொகுப்பு குளிர்விப்பான்கள் நிறுவப்பட்டு பாலின் ஆரம்ப தரம் பாதுகாக்கப்பட்டுள்ளது.
6. பசும்பாலுக்கு லிட்டர் ஒன்றுக்கு ரூ.20/– மற்றும் எருமைப்பாலுக்கு ரூ.28/– வீதம் உற்பத்தியாளர்களுக்கு பால் கொள்முதல் விலை வழங்கப்பட்டு வருகிறது.

**5.0 பால் நுகர்வோர்களுக்கான சேவை**

தமிழகத்தில் ‘ஆவின்’ வணிகச்சின்னம் மக்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது. சென்னை பெருநகரில் 3 பால்பண்ணைகளும் மற்றும் ஒரு பால் உபபொருட்கள் பண்ணையும் செயல்பட்டு வருகின்றன. இந்த பால்பண்ணைகள் அனைத்தும் தரத்தை உறுதி செய்வதற்கான சர்வதேச தரச்சான்று மற்றும் HACCP (Hazard Analysis and Critical Control Point) சான்றிதழ்கள் பெற்றுள்ளன. இதனால் ஆவின் மூலம் விற்பனை செய்யப்படும் பால் மற்றும் பால் உபபொருட்களின் உணவுப் பாதுகாப்பு மற்றும் தரம் உறுதி செய்யப்படுகிறது.

சுற்றுப்புற சூழல் மேலாண்மையினை செயல்படுத்தியமைக்காக சென்னை பெருநகர பால்பண்ணைகள் ISO 14001 (International Standards Organistion) சான்றிதழ் பெற்றுள்ளன.

நுகர்வோர் தங்களது கருத்துக்கள் மற்றும் குறைகளை பதிவு செய்வதற்காக சென்னை நந்தனத்தில் அமைந்துள்ள ஆவின் விற்பனை பிரிவில் 24 மணிநேர நுகர்வோர் சேவை மையம் செயல்பட்டு வருகிறது. நுகர்வோர் தொடர்பு கொள்ள கட்டணமில்லா தொலை பேசி எண் 18004253300 நந்தனம் அலுவகத்தில் நிறுவப்பட்டு நுகர்வோர் குறைகளை உடனுக்குடன் தீர்க்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நுகர்வோரின் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு சென்னை மாநகரில் 723 பால் பூத்துக்கள் இயங்கி வருகின்றன. நுகர்வோர்களுக்கு தரமான பால் விநியோகம் செய்யும் பொருட்டு சென்னை பெருநகரில் தற்போது 58 பாலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

**6. பால்வளத்துறை மற்றும் பால் கூட்டுறவு பணியாளர்களின் நலன்**

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தில் **1,979** பணியாளர்களும் **17** மாவட்ட ஒன்றியங்களில் **3,930** பணியாளர்களும் மற்றும் **9,231** பிரதம பால் கூட்டுறவு சங்கங்களில் **19,823** பணியாளர்களும் தற்போது பணியாற்றி வருகின்றனர். அவர்களுக்கு கீழ்க்கண்ட நலஉதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன:-

1. இணையம் மற்றும் ஒன்றிய பணியாளர்களுக்கு உற்பத்தியுடன் கூடிய ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகிறது.
2. பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க பணியாளர்களுக்கு கடந்த **25.11.2011** முதல் மாதம் ஒன்றுக்கு ரூ.**200/–** சம்பள உயர்வு வழங்கப்பட்டு வருகிறது.
3. இத்துறை, இணையம் மற்றும் ஒன்றிய பணியாளர்களுக்கு போனஸ் மற்றும் கருணைத்தொகை வழங்கப்பட்டு வருகிறது.
4. பால் கூட்டுறவு பணியாளர்களுக்கு பண்டிகைகளை முன்னிட்டு பால் உபபொருட்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டு வருகிறது.

**7. பால் கொள்முதல்**

கடந்த 2011–2012 ஆம் ஆண்டில் சங்கங்களிலிருந்து நாளொன்றுக்கு சராசரியாக 21 முதல் 25 இலட்சம் லிட்டர் வரை பால் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. அதற்கு முந்தைய ஆண்டான 2010–2011 ல் 75.44 கோடி லிட்டராக இருந்த பால் கொள்முதல் கடந்த 2011–2012 ஆம் ஆண்டில் 78.11 கோடி லிட்டர் என்ற அளவில் உயர்ந்துள்ளது.

மாநிலத்தில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு பால் வழங்கி வரும் 4.19 இலட்சம் உற்பத்தியாளர்களுக்கு உதவும் பொருட்டு, பால்கொள்முதல் விலையை பசும்பாலுக்கு லிட்டர் ஒன்றுக்கு ரூ.18/– லிருந்து ரூ.20/– எனவும், எருமைப்பாலுக்கு லிட்டர் ஒன்றுக்கு ரூ.26/– லிருந்து ரூ.28/– எனவும் 18.11.2011 முதல் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

அதே போன்று பால் விற்பனை விலையை பால் அட்டைதாரர்களுக்கு சமன் படுத்திய பால் லிட்டர் ஒன்றுக்கு ரூ.17.75 லிருந்து ரூ.24.00 ஆகவும் உயர்த்தி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனினும், இந்த விலையானது

அண்டை மாநிலங்கள் மற்றும் தனியார் விற்பனை செய்யும் பாலின் விலையினை விட குறைவானது ஆகும்.

### 7.1 பால் உற்பத்தியாளர்களுக்கு பால்பணம் பட்டுவாடா செய்ய அரசின் சிறப்பு நிதி உதவி

கடந்த 5.01.2011 மற்றும் 16.02.2011 தேதிகளில் பால் கொள்முதல் விலை மட்டும் உயர்த்தப்பட்டு, பாலின் விற்பனை விலை உயர்த்தப்படாத நிலையில் இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களுக்கு ஏற்பட்டுள்ள கூடுதல் செலவினத்தை கருத்தில் கொண்டும், பால் உற்பத்தியாளர்களுக்கு பால்பணம் பட்டுவாடா நிலுவையின்றி வழங்குவதற்காகவும் அரசு நிதி உதவியாக வட்டியில்லா வழிவகை கடன் மூன்று தவணைகளில், 7.7.2011ல் 49.65 கோடி ரூபாயும், 8.9.2011ல் 33.10 கோடி ரூபாயும் மற்றும் 4.11.2011ல் 33.10 கோடியும் ஆக மொத்தம் 115.85 கோடி ரூபாய் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வழங்கியுள்ளார்கள்.

## 8. மாநிலத் திட்டங்கள்

### 8.1. பகுதி–2 திட்டம் –2012–2013

கிராம அளவில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த, 2012–2013 ஆம் ஆண்டில்

113.91 இலட்சம் ரூபாய் பகுதி–2 திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படும். இதில் 98.91 இலட்சம் ரூபாய் அரசு பங்காகவும், மீதமுள்ள ரூ.15 இலட்சம் ரூபாய் பயனீட்டாளர் பங்காகவும் இருக்கும்.

இத்திட்டத்தில் கீழ்க்காணும் பணிகள் நடைபெறவுள்ளன.

அ) 250 பால் கூட்டுறவு சங்கங்களுக்கு ரூ.3000 மதிப்புள்ள 1000 துருவுறா எஃகிலான பால் கொள்கலன்கள் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் வழங்குதல். இதில் ரூ.15 இலட்சம் அரசும், மீதமுள்ள ரூ.15 இலட்சத்தை பயனீட்டாளர்களும் ஏற்றுக் கொள்வர்.

ஆ) பால்வளத்துறை ஆணையர்அலுவலவகத்திற்கு ஒரு நகல் இயந்திரமும், ஒரு தொலை நகல் இயந்திரமும் ரூ.0.83 இலட்சம் மதிப்பீட்டில் வாங்குதல்.

இ) மாதவரம் பால்பண்ணை வளாகத்திலுள்ள பழப்பண்ணைக்கு ரூ.19.27 இலட்சம் செலவில் 600 மீட்டர் நீளத்திற்கு சுற்றுச்சுவர் அமைத்தல்.

ஈ) பால்வளத்துறை ஆணையர் அலுவகத்திலுள்ள கழிவுநீர் அகற்றும் தொட்டிக்கு ரூ.2.50 இலட்சம்

செலவில் ஒரு கழிவுநீர் ஏற்றும் மோட்டார் மற்றும் இதர பொருட்கள் நிறுவுதல்.

உ) தஞ்சாவூர், திருவாரூர், திருவண்ணாமலை மற்றும் நாகர்கோவில் துணைப்பதிவாளர் (பால்பதம்) ஆகியோருக்கு ரூ.24.80 இலட்சம் செலவில் புதிய சிற்றுந்து வாங்கி வழங்குதல்.

**8.2. திருவண்ணாமலை பால்பண்ணை மற்றும் பால்பவுடர் தொழிற்சாலை**

நாளொன்றுக்கு 2 இலட்சம் லிட்டர் பால் கையாளும் திறனுள்ள பால்பண்ணை மற்றும் 20 டன் பால்பவுடர் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை தேசிய பால்வள வாரியம் மூலமாக திருவண்ணாமலை மாவட்டம், அம்மாபாளையம் கிராமத்தில் ரூ.60.18 கோடி செலவில் நிறுவும் பணி நடைபெற்று வருகிறது.

திட்டமதிப்பீட்டில் 95 சதவிதமான ரூ.56.93 கோடி நபார்டு வங்கி கடனாகவும், மீதமுள்ள 5 சதவிகிதமான ரூ.3.25 கோடி அரசு பங்காகவும் வழங்கப்படவுள்ளது. மாநில அரசு வழங்கிய ரூ.45.74 கோடி, தேசிய பால்வள வாரியத்திற்கு செலுத்தப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் ஜுலை 2013க்குள் நிறைவேற்றப்படவுள்ளன.

## 9.0 திட்டங்கள்

### 9.1 தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் மற்றும் தேசிய சிறப்பு புரதச்சத்து ஈடுசெய்யும் திட்டம்

தலைமைச் செயலரின் தலைமையிலான 'மாநில அளவிலான திட்ட அனுமதிக்குழு' பால்வளத்துறைக்கு தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.24.62 கோடி வழங்கியுள்ளது. வரும் ஆண்டுகளில் பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணைகளின் கையாளும் திறனை அதிகரிக்கவும், நடமாடும் கால்நடை மருத்துவ குழுக்களை உருவாக்கி தரமான கால்நடை மருத்துவ வசதிகளை ஏற்படுத்தவும், கால்நடை மருத்துவர்கள் சங்கங்களுக்கு குறுகிய கால இடைவெளியில் சென்று கால்நடை மருத்துவம் பார்க்கவும், 50 சதவிகிதம் கிராமங்களில் சங்கங்கள் இல்லாததால் அந்த கிராமங்களில் புதிய சங்கங்கள் உருவாக்குவதற்கும் திட்டங்கள் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், மாதவரம், அம்பத்தூர், சோழிங்கநல்லூர் பால்பண்ணைகள் மற்றும் ஈரோடு, கிருஷ்ணகிரி, காஞ்சிபுரம் மற்றும் விழுப்புரம் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றிய பால்பண்ணைகள் ஆகியவற்றின்

உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் ரூ.9.33 கோடி அரசு வழங்கியுள்ளது.

### 9.1.1 உற்பத்தியாளர் இடங்களிலேயே கால்நடைகளுக்கு மருத்துவ வசதி வழங்குதல்

மாவட்ட ஒன்றியங்களைச் சார்ந்த 9231 சங்கங்களை உள்ளடக்கி, 276 நடமாடும் கால்நடை மருத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 121 கால்நடை மருத்துவக் குழுக்கள் தற்போதுள்ள கால்நடை மருத்துவர்களாலும், மீதமுள்ள 155 மருத்துவக் குழுக்கள் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கால்நடை மருத்துவர்களாலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 9.1.2 வேலூர் பால்பண்ணையைப் பலப்படுத்துதல்

புதிய பால் பதப்படுத்தும் இயந்திரம், பால் சமச்சீர் இயந்திரம், பால் கொழுப்பு பதப்படுத்தும் இயந்திரம், பால் கொழுப்பு கொள்கலன், நெய் காய்ச்சும் இயந்திரம், நெய் சேகரிக்கும் தொட்டி மற்றும் பால்பை நிரப்பும் இயந்திரங்கள் 1.13 கோடி ரூபாய் செலவில் நிறுவப்பட்டு வருகிறது.

### 9.1.3 அம்பத்தூர் பால் உபபொருட்கள் பண்ணையை மேம்படுத்துதல்

அம்பத்தூர் பால் உபபொருட்கள் பண்ணையில் ஐஸ்கிரீம் மற்றும் குச்சிவகை ஐஸ்கிரீம் உற்பத்தியை மேம்படுத்துதல், உறையக்கூடிய பால் உப பொருட்களை சேமிக்கும் குளிர்பதன அறையை வலுப்படுத்துதல் ஆகிய பணிகளை 1.00 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 9.1.4 பால் குளிர்விப்பான்கள் நிறுவுதல்

தொகுப்பு பால் குளிர்விப்பான்கள் முறையே சேலம் ஒன்றியத்திற்கு 6, ஈரோடு ஒன்றியத்திற்கு 3 மற்றும் விழுப்புரம் ஒன்றியத்திற்கு 1 ஆக மொத்தம் 10 தொகுப்பு பால் குளிர்விப்பான்கள் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டு வருகின்றன.

### 9.1.5 கிருஷ்ணகிரி பால்பண்ணையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

கிருஷ்ணகிரி பால்பண்ணைக்கு புதிய பால் பதப்படுத்தும் இயந்திரம், கொழுப்பு பிரித்தெடுக்கும் இயந்திரம், பண்ணைக்கு தேவையான தண்ணீர் ஆற்றுப்படுகைகளிலிருந்து எடுத்து வரும் அமைப்பு, கொதிகலன் சிம்னி மாற்றுதல், குளிர்பதனப் பிரிவு கன்டென்சர்கள் (Condensor) மாற்றுதல், பால் மற்றும் பால்

கொழுப்பு கொள்கலன்களை மாற்றுதல், வெண்ணெய் சேமிக்கும் அறையை செப்பனிடுதல் ஆகிய பணிகள் 2.70 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பால் உற்பத்தியை அதிகரிக்கவும், தரமான பால்பவுடர் தயாரிக்கவும், பால் சமச்சீர் இயந்திரம், பால் பவுடர் தொழிற்சாலையில் உள்ள காலன்டிரீயா பகுதி மற்றும் தானியங்கி செயல்பாட்டு அமைப்பு ஆகியவை 90 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டு வருகின்றன.

**9.1.6 காக்களூர் பால்பண்ணையில் கையாளும் திறனை மேம்படுத்துதல்**

காக்களூர் பால்பண்ணை, நாளொன்றிற்கு இலட்சம் லிட்டர் பால் கையாளும் திறனுள்ள பால்பண்ணையாக மாற்ற 3.65 கோடி ரூபாய் செலவில் விரிவாக்கம் செய்யப்பட்டு வருகின்றது. இப்பண்ணையிலிருந்து உற்பத்தியாகும் பால் பைகள் சென்னை மாநகரத் தேவையை பூர்த்தி செய்ய பயன்படுத்தப்படும்.

பால்பண்ணையிலுள்ள குளிர்சாதன இயந்திரம், பால் பை சேமிக்கும் அறை, கொதிகலன், பால் பை நிரப்பும் இயந்திரங்கள் மற்றும் பால் சேகரிக்கும் கொள்கலன் ஆகியவை 40 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படவுள்ளது.

**9.1.7 பால் உபபொருட்கள் விற்பனைக்கு தேவையான குளிர் நிலை தொடர் அமைப்பை ஏற்படுத்துதல்**

சென்னை அசோக் நகரில் புதிய பாலகம் நிறுவப்பட்டுள்ளது. மேலும் **2** புதிய பாலகங்கள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. **35** பாட்டில் குளிர்விப்பான்கள் (Bottle Cooler), 35 வெண்ணெய் குளிர்விப்பான்களும் (Deep Freezer) நிறுவப்பட்டுள்ளன. நடமாடும் பாலகங்கள் நிறுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**9.1.8 மாதவரம் பால்பண்ணையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்**

மாதவரம் பால்பண்ணையில் உள்ள பால் குளிர்விக்கும் அமைப்பு, பால் குளிர்விக்கும் இயந்திரம், வெண்ணெய் சேமிக்கும் அறை மற்றும் பைகளில் பால் நிரப்பும் இயந்திரங்கள் மற்றும் பால் பை சேமிக்கும் அறை ஆகியவை **1** கோடியே **82** இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

**9.1.9 அம்பத்தூர் பால்பண்ணையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்**

அம்பத்தூர் பால்பண்ணையில் புதிய பால் கொள்கலன்கள், தானியங்கி சுத்திகரிக்கும் அமைப்பு, பால் பை நிரப்பும் இயந்திரங்கள், குளிரூட்டும் பிரிவிற்கான கண்டன்சர்கள், சூரிய ஒளி தண்ணீர் கொதிகலன், பால்பை

ஏற்றும் பகுதியை விரிவாக்கம் செய்தல் மற்றும் பால்பை சேமிக்கும் அறை ஆகியவை 2.52 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டு வருகின்றன.

**9.1.10 சோழிங்கநல்லூர் பால்பண்ணை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்**

பால் பதப்படுத்தும் இயந்திரம், குளிர்சாதன பிரிவிற்கு தேவையான இயந்திரம், பால் கொள்கலன், வெண்ணெய் சேமிக்கும் அறை விரிவாக்கம், பால் பை நிரப்பும் இயந்திரம் ஆகியவை 1.72 கோடி ரூபாயில் நிறுவப்பட்டு வருகின்றன.

**9.1.11 ஈரோடு பால்பண்ணை விரிவாக்கம்**

ஈரோடு ஒன்றியத்தில் பால்பவுடர் ஆலையை செப்பனிடுதல், பால் கொழுப்புச்சத்து கையாளும் பிரிவு மற்றும் பால் இயந்திரங்கள் சுத்திகரிக்கும் அமைப்பு ஆகிய பணிகள் 1.66 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**9.1.12 விழுப்புரம் பால்பண்ணை விரிவாக்கம்**

விழுப்புரம் பால்பண்ணை குளிர்சாதனப் பிரிவில் கம்பரசர், தண்ணீரை குளிர்விக்கும் தொட்டிக்கு மேற்கூரை மற்றும் பால்பை இயந்திரங்கள் ஆகியவை 31 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டு வருகின்றன.

## 9.2 தீவிர பால் பெருக்குத் திட்டம்

மாவட்ட அளவில் பால் உற்பத்தியைப் பெருக்குதல், பால் விற்பனையை உயர்த்துதல், பால் விற்பனைக்கும் பால் பதப்படுத்துவதற்கும் தேவையான உட்கட்டமைப்புகளை விரிவாக்குதல், இடு பொருட்கள் வழங்கப்படுவதை அதிகரித்தல் மற்றும் மனித வளத்தை மேம்படுத்துதல் ஆகியவை இத்திட்டத்தின் குறிக்கோள்கள் ஆகும். இத்திட்டத்தின்கீழ் பெறப்படும் நிதி உதவி 100 சதவிகிதம் மானியமாகும். இத்திட்டத்தின் கால அளவு ஐந்து ஆண்டுகள் ஆகும்.

இத்திட்டத்தை புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தில் செயல்படுத்த 2.99 கோடி ரூபாயும், விருதுநகர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தில் செயல்படுத்த 2.99 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மத்திய அரசு, முதல் ஆண்டு மானியமாக இத்திட்டத்தை செயல்படுத்தும் ஒன்றியங்களுக்கு 1.89 கோடி ரூபாய் விடுவித்துள்ளது.

மேலும், இத்திட்டத்தின் வாயிலாக மத்திய அரசிடமிருந்து நிதியுதவிபெற நீலகிரி ஒன்றியம் 3 கோடி ரூபாய், தருமபுரி ஒன்றியம் 4.13 கோடி ரூபாய், காஞ்சிபுரம்

ஒன்றியம் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்டவரைவுகள் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## 9.3 தூய பால் உற்பத்தி

இத்திட்டத்தின் குறிக்கோள், கிராமப்புற விவசாயிகளுக்கு தூய பால் உற்பத்தி குறித்து பயிற்சி அளித்தல், பால் உற்பத்தியாளர்களுக்குத் தேவையான எவர்சில்வர் பாத்திரங்கள், நுண்மத்தடை திரவங்கள் வழங்குதல், ஒன்றியங்கள் மற்றும் குளிரூட்டும் நிலையங்களில் உள்ள பரிசோதனைக் கூடங்களை மேம்படுத்துதல், பாலின் முதன்மைத் தரத்தை அதிகரிக்க தேவைப்படும் மொத்த பால் குளிர்விப்பான்களை சங்கத்தில் நிறுவுதல் ஆகியவை ஆகும்.

விவசாயிகளுக்கு பயிற்சி, நுண்மத்தடை திரவம் வழங்குதல், எவர்சில்வர் பாத்திரங்கள் வழங்குதல், பால் பரிசோதனைக் கூடங்களை மேம்படுத்துதல் ஆகியவற்றை மேற்கொள்ள மத்திய அரசு 100 சதவிகிதம் மானியம் வழங்குகிறது.

மொத்த பால் குளிர்விப்பான்கள் நிறுவுவதற்கு மட்டும் மத்திய அரசு 75 சதவீதம் மானியம் வழங்குகின்றது.

மீதமுள்ள 25 சதவீதம் செலவினத்தை பயனாளி ஒன்றியங்கள் ஏற்றுக்கொள்ளும்.

இத்திட்டம் வேலூர், விழுப்புரம், திருச்சி, தருமபுரி, சேலம், ஈரோடு, நீலகிரி, காஞ்சிபுரம்–திருவள்ளூர், மதுரை, திண்டுக்கல், சிவகங்கை, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் 23.42 கோடி ரூபாய் திட்டமதிப்பீட்டில் செயல்படுத்த மைய அரசு அனுமதி அளித்துள்ளது. இதில், மத்திய அரசின் மான்யம் 19.03 கோடி ரூபாய், பயனீட்டாளர்கள் பங்கு 4.39 கோடி ரூபாய் ஆகும். மத்திய அரசு இதுவரை 14.65 கோடி ரூபாய் மானியமாக வழங்கியுள்ளது.

மேலும், இத்திட்டத்தின் வாயிலாக மத்திய அரசிடமிருந்து நிதியுதவிபெற ஈரோடு ஒன்றியத்திற்கு 13.89 கோடி ரூபாய், சேலம் ஒன்றியத்திற்கு 14.35 கோடி ரூபாய், விருதுநகர் ஒன்றியத்திற்கு 1.13 கோடி ரூபாய் மற்றும் தஞ்சாவூர் ஒன்றியத்திற்கு 2.19 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்டவரைவுகள் மாநில அரசின் ஒப்புதலுடன் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

**10. “கூட்டுறவுகளுக்கு உதவுதல்” – புனரமைப்புத் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ், நட்டத்தில் செயல்படும் ஒன்றியங்கள் மற்றும் இணையம் ஆகியவற்றின் நட்டத்தை சரி செய்து கொள்வதற்காக, மத்திய அரசு 50 விழுக்காடு தொகையை மானியமாகவும், மாநில அரசு 50 விழுக்காடு தொகையை மானியமாகவும் வழங்கும்.

மத்திய அரசு “கூட்டுறவுகளுக்கு உதவுதல்” என்னும் திட்டத்தினை நட்டத்தில் இயங்கும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் மற்றும் இணையங்களை சீரமைப்பதற்காக செயல்படுத்துகிறது.

இத்திட்டங்கள் மாநில அரசின் ஒப்புதலுடன் தேசிய பால்வள வாரியத்தால் (NDDB) தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்படுகிறது.

2011–2012 ஆம் ஆண்டில் இத்திட்டத்தை செயல்படுத்த திண்டுக்கல் ஒன்றியத்திற்கு ரூ.1.33 கோடியும், தஞ்சாவூர் ஒன்றியத்திற்கு ரூ.7.60 கோடியும் மற்றும் காஞ்சிபுரம் ஒன்றியத்திற்கு ரூ.3.88 கோடியும் மத்திய மற்றும் மாநில அரசு அனுமதி அளித்துள்ளது.

மாநில அரசின் ஒப்புதலுடன் தேசிய பால்வள வாரியம் நீலகிரி மாவட்டத்தில் இத்திட்டத்தை செயல்படுத்த

7.17 கோடி மதிப்பீட்டில் திட்ட அறிக்கை தயார் செய்து மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பியுள்ளது.

**11. அம்பத்தூர் பால்பண்ணை வளாகத்தில் புதிய பால் உபபொருட்கள் பண்ணை நிறுவுதல்**

அம்பத்தூர் பால்பண்ணை வளாகத்தில் தற்போது இயங்கி வரும் பால் உபபொருட்கள் பண்ணையில் ஐஸ்கிரீம், கோவா, லஸ்ஸி, தயிர், மோர், பன்னீர், குலோப்ஜாமூன், மைசூர்பா ஆகியவை தயாரிக்கப்படுகிறது. தற்போதுள்ள உபபொருட்கள் உற்பத்தி திறன் குறைவாக உள்ளதால் சென்னை மாநகரின் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு ஒரு புதிய பால் உபபொருட்கள் பண்ணை நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய பால் உபபொருட்கள் பண்ணை, அம்பத்தூர் பால்பண்ணையின் அருகாமையிலுள்ள 2.50 ஏக்கர் இடத்தில் ரூ.12 கோடி மதிப்பீட்டில் இணைய நிதியிலிருந்து ஆரம்ப கட்ட பணிகள் துவக்கப்பட்டுவருகிறது. இதற்கான நிதி உதவியை நபார்டு வங்கி மற்றும் இதர வகைகளில் பெறுவதற்கு இணையம் உரிய நடவடிக்கையை மேற் கொண்டு வருகிறது.

**12. தொலை நோக்குத் திட்டம் 2011–2016**

இரண்டாவது வெண்மைப் புரட்சியை ஏற்படுத்தும் நோக்கில் கீழ்க்கண்ட பணிகளைப் பால்வளத்துறை செயல்படுத்தி வருகிறது:-

- 2011–2012 முதல் 2014–2015 வரையிலான 4 ஆண்டுகளில் 6000 புதிய சங்கங்கள் உருவாக்குதல், இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் அரசு சாரா அமைப்புகள் மூலம் 1500 சங்கங்கள் உருவாக்கப்படும்.
- 9231 சங்கங்களில் செயல்படும் 121 கால்நடை வழித்தடங்கள் மாற்றி அமைக்கப்பட்டு, 276 நடமாடும் கால்நடை குழுக்களாக செயல்படுத்தப்படும். இதனால் சங்க உறுப்பினர்களுடைய கறவை மாடுகளுக்கு 24 மணி நேரமும் கால்நடை மருத்துவ வசதி கிடைக்கப்பெறும். தமிழ்நாடு கால்நடை வளர்ச்சி முகமை மூலம் கால்நடை காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும்.
- சங்க உறுப்பினர்களின் கால்நடைகளுக்கு சமச்சீர் கால்நடைத்தீவனம் வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

- புல் வளர்ப்பில் ஆர்வம் உள்ள சங்க உறுப்பினர்கள் ஊக்குவிக்கப்படுவர்.
- கிராமப்புறங்களில் பால் குளிரூட்டும் வசதிகளும் பால்பண்ணைகளின் கையாளும் திறனை அதிகப்படுத்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.
- பால் உபபொருட்களை தயாரிக்கும் வசதி அதிகரிக்கப்பட்டு பால் உபபொருட்கள் விற்பனை செய்யப்படும்.

**13 . 2012 – 2013 ஆம் ஆண்டிற்கான திட்டம்.**

**13.1 சங்கங்கள் மூலம் பால் கொள்முதல்**

கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரித்து, கால்நடை தீவனம் வழங்கி மற்றும் கால்நடை மருத்துவ வசதிகளை பெருக்கி, சங்கங்கள் மூலம் கொள்முதல் செய்யப்படும் பாலை நாளொன்றிற்கு **28** இலட்சம் லிட்டராக உயர்த்தப்படவுள்ளது.

**13.2 பால் மற்றும் பால் உபபொருட்களின் விற்பனையை அதிகரித்தல்**

சென்னை மாநகரத்தின் மக்கள் தொகை அதிகரித்து வருகிறது. வளர்ந்து வரும் மக்கள் தொகையின்

தேவைக்கேற்ப தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், சென்னை மாநகர பால் விற்பனையை நாளொன்றுக்கு ஒரு இலட்சம் லிட்டர் அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் ஐஸ்கிரீம் மற்றும் இதர பால் உப பொருட்கள் தயாரிக்கும் திறனை நுகர்வோரின் தேவைக்கேற்ப உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

**13.3 பால் விற்பனை**

சென்னை மாநகரில் நாளொன்றுக்கு 11 இலட்சம் லிட்டர் பால் மற்றும் மாவட்ட ஒன்றியங்களில் நாளொன்றுக்கு 10 இலட்சம் லிட்டர் பால் பலவிதமான வகைகளில் வேறுபட்ட அளவுகளில் விற்பனை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை – 4

பால் விற்பனை விலை (ரூபாயில்)

| வ. எண் | பாலின் வகை | பால் பை நிறம் | விவரம் | | அட்டை தாரர் களுக்கு | அதிகபட்ச சில்லரை விற்பனை விலை |
|---|---|---|---|---|---|---|
| | | | கொழுப்பு சத்து% | இதர சத்து% | 500 மி.லிட்டர் பால் | |
| **1** | இருநிலை சமன் படுத்திய பால் | இளஞ் சிவப்பு | **1.5** | **9.0** | **11.50** | **12.00** |
| **2** | சமன் படுத்திய பால் | நீலம் | **3.0** | **8.5** | **12.00** | **13.50** |
| **3** | நிலைப் படுத்திய பால் | பச்சை | **4.5** | **8.5** | **14.50** | **15.50** |
| **4** | கொழுப்பு சத்து நிறைந்த பால் | ஆரஞ்சு | **6.0** | **9.0** | **16.50** | **17.50** |

**14.** பால் உபபொருட்கள் விற்பனை

ஆவின் பால் உபபொருட்கள் நுகர்வோர்களின் வரவேற்பைப் பெற்றுள்ளது. பால் உபபொருட்கள் இணையம் மற்றும் ஒன்றிய பால்பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு

வருகிறது. நெய், வெண்ணெய், பால்பவுடர், பாதாம் பவுடர், இனிப்பு கோவா, டெட்ரா பாக்கெட்டில் அடைக்கப்பட்டுள்ள பால், பேரிச்சம்பழக் கோவா, பன்னீர், தயிர், யோகர்ட், மோர், ஐஸ்கிரீம், குலோப்ஜாமூன் மற்றும் நறுமணப்பால் ஆகிய பால் உபபொருட்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இவை இணையம் மற்றும் ஒன்றிய பாலகங்களின் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

**அட்டவணை – 5**
**ஒன்றியங்களில் பால் உபபொருட்கள் ஆண்டு உற்பத்தி விபரம்**

| வ. எண் | ஒன்றியத்தின் பெயர் | பால் பவுடர் (டன்) | வெண்ணெய் (டன்) | நெய் (டன்) | கோவா (கிலோ) | ஐஸ் கிரீம் (லிட்டரில்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | விழுப்புரம் | – | – | 21 | 1,683 | – |
| 2 | வேலூர் | – | – | 155 | 11,600 | 5,764 |
| 3 | தர்மபுரி | 451 | 546 | 327 | 12,299 | – |
| 4 | சேலம் | 1,505 | 1,955 | 159 | 24,200 | – |
| 5 | ஈரோடு | 3,215 | 1,996 | 468 | 72,000 | – |
| 6 | கோயம் –புத்தூர் | – | 7 | 114 | 22,397 | – |
| 7 | நீலகிரி | – | 23 | 23 | 5,120 | 3,970 |
| 8 | மதுரை | 680 | 547 | 135 | 10,600 | – |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 9 | திண்டுக்கல் | – | – | 50 | 220 | – |
| 10 | திருச்சி | – | – | 180 | 7,000 | – |
| 11 | தஞ்சாவூர் | – | – | 4 | 30,000 | – |
| 12 | புதுக்கோட்டை | – | – | – | 300 | – |
| 13 | சிவகங்கை | – | – | 50 | 200 | – |
| 14 | விருதுநகர் | – | – | 31 | 1,000 | – |
| 15 | திருநெல்வேலி | – | – | 96 | 10,780 | 625 |
| 16 | கன்னியா –குமரி | – | – | 3 | 60 | – |
| 17 | காஞ்சிபுரம் – திருவள்ளூர் | – | – | – | 100 | – |
| | மொத்தம் | 5,851 | 5,074 | 1,816 | 2,09,559 | 10,359 |

**அட்டவணை 6 –அம்பத்துார் பால் உபபொருட்கள் பண்ணையின் ஆண்டு உற்பத்தி விபரம்**

| வ.எண் | பால் உபபொருட்கள் | உற்பத்தி விபரம் |
|---|---|---|
| **1.** | **கோவா (டன்)** | **289.60** |
| **2.** | **மைசூர் பா (டன்)** | **76.90** |
| **3.** | **குலோப் ஜாமூன் (டன்)** | **14.60** |
| **4.** | **தயிர் (இலட்சம் லிட்டர்)** | **3.50** |
| **5.** | **லஸ்ஸி (இலட்சம் லிட்டர்)** | **3.36** |
| **6.** | **மோர் (இலட்சம் லிட்டர்)** | **6.47** |

| | | |
|---|---|---|
| **7.** | **யோகர்ட் (இலட்சம் எண்ணிக்கை)** | **1.31** |
| **8.** | **பன்னீர் (டன்)** | **20.00** |
| **9.** | **ஐஸ்கிரீம் (இலட்சம் லிட்டர்)** | **2.26** |

**15. பால் கூட்டுறவுகளின் தணிக்கைத்துறை**

பால் கூட்டுறவுகளின் தணிக்கைத்துறை, **01–10–1987** முதல் செயல்பட்டு வருகிறது. தொடக்க நிலையில் பால் உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட அளவில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் மற்றும் மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் ஆகியவற்றின் தணிக்கைகளை இத்துறை மேற்கொண்டு வருகிறது.

இத்துறையில் கூட்டுறவுத்துறை, நிதித்துறை மற்றும் கருவூலம் மற்றும் கணக்குத்துறைகளிலிருந்து **307** பணியாளர்கள் அயற்பணியில் பணி புரிந்து வருகிறார்கள். இதில் இத்துறையைச் சேர்ந்த **28** பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

**தணிக்கைக் கட்டணம் மற்றும் அடிப்படை விதிக் கட்டணம்**

**01–04–2011** முதல் **31–03–2012** வரை தணிக்கைக் கட்டண கேட்பு ரூ.**25.48** இலட்சத்தில் ரூ.**24.37** இலட்சம் வசூலிக்கப்பட்டு அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் இவ்வாண்டில் அடிப்படைவிதி கட்டண கேட்பு ரூ.**56.77** இலட்சத்தில் ரூ.**52.77** இலட்சம் வசூலிக்கப்பட்டு அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

**16.** முடிவுரை

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின்** தொலை நோக்குப் பார்வையினாலும், வழிகாட்டுதலினாலும், விலையில்லா கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தின் வாயிலாகவும் பால்வளத்துறை வளர்ச்சிப் பாதையில் முன்னேறி வருகிறது.

சங்கங்கள் இல்லா கிராமங்களில் புதிய சங்கங்கள் அமைத்தல், உற்பத்தியாளர்களின் இருப்பிடம் தேடிச் சென்று கால்நடை மருத்துவ வசதிகள் செய்தல் ஆகியவற்றின் மூலம் கூட்டுறவு சங்க உற்பத்தியாளர்களிடையே பால் உற்பத்தித் தொழிலில் ஈர்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

அதிகரிக்கப்பட்ட பால் கையாளும் திறன், நுகர்வோரை சென்று அடையும் வரை குளிரூட்டும் திறனைக்

காத்தல், பணியாளர்களின் சிறப்பான பணி ஆகியவற்றினால் செலவினங்கள் குறைந்து உறுப்பினர்களுக்கு அதிகப்படியான வருமானம் ஈட்ட வழிவகை ஏற்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குத் திட்டமான இரண்டாவது வெண்மைப் புரட்சி அமைந்திட பால்வளத்துறை மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்கத் தொடங்கியுள்ளதால் கிராம பொருளாதாரத்தில் மிகப்பெரிய மறுமலர்ச்சி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**V. மூர்த்தி**
**பால் மற்றும் பால்பண்ணை**
**மேம்பாட்டுத்துறை அமைச்சர்.**

**அட்டவணை– 7**

**முக்கியத் தகவல்கள்**

| வ. எண் | பொருள் | விபரம் |
|---|---|---|
| 1 | மொத்த பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை | 9,231 |
| 2 | 2011–2012ல் துவங்கப்பட்ட / புதுப்பிக்கப்பட்ட சங்கங்கள் எண்ணிக்கை | 1,460 |
| 3 | தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த உறுப்பினர்கள் (இலட்சத்தில்) | 22.26 |
| 4 | பால் வழங்கும் உறுப்பினர்கள் (இலட்சத்தில்) | 4.19 |
| 5 | சங்கங்களில் பால் கொள்முதல் (நாளொன்றிற்கு) (இலட்சம் லிட்டரில்) | 24 முதல் 29 |
| 6 | மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் எண்ணிக்கை | 17 |
| 7 | மாநில அளவிலான இணையம் | 1 |
| 8 | தனியார் பால்பண்ணைகளின் எண்ணிக்கை | 42 |
| 9 | ஒன்றியங்களில் பால் கொள்முதல் (நாளொன்றிற்கு) (இலட்சம் லிட்டரில்) | 21 முதல் 25 |
| 10 | சென்னை மாநகரில் பால் விற்பனை (நாளொன்றிற்கு) (இலட்சம் லிட்டரில்) | 10.57 |

| | | |
|---|---|---|
| 11 | மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் பால் விற்பனை (நாளொன்றிற்கு) (இலட்சம் லிட்டரில்) | 9.78 |
| 12 | ஒன்றியங்களில் பால் பதப்படுத்தும் பால்பண்ணைகளின் எண்ணிக்கை | 16 |
| 13 | இணையத்தின் பால்பண்ணைகள் எண்ணிக்கை | 4 |
| 14 | மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் பால்பண்ணைகள் கையாளும் திறன் (நாளொன்றிற்கு) (இலட்சம் லிட்டரில்) | 20.72 |
| 15 | இணையத்திலுள்ள பால்பண்ணைகள் கையாளும் திறன் (நாளொன்றிற்கு) (இலட்சம் லிட்டரில்) | 10.00 |
| 16 | பதிவு செய்யப்பட்ட தனியார் பால்பண்ணைகளின் கொள்முதல் (நாளொன்றுக்கு) (இலட்சம் லிட்டரில்) | 30.50 |
| 17 | செயல்படும் குளிரூட்டும் நிலையங்களின் எண்ணிக்கை | 35 |

| | | |
|---|---|---|
| **18** | குளிரூட்டும் நிலையங்களின் கையாளும் திறன் (நாளொன்றிற்கு) (இலட்சம் லிட்டரில்) | 14.75 |
| **19** | செயல்படும் மொத்த பால் குளிர்விப்பான்கள் | 184 |
| **20** | மொத்த பால் குளிர்விப்பான்கள் குளிர்விக்கும் திறன் (நாளொன்றுக்கு) (இலட்சம் லிட்டரில்) | 7.33 |
| **21** | கிராம பால் கொள்முதல் வழித்தடங்கள் எண்ணிக்கை | 528 |
| **22** | ஒன்றியங்களில் பால் வினியோக வழித்தடங்கள் எண்ணிக்கை | 230 |
| **23** | சென்னை மாநகர பால் வினியோக வழித்தடங்கள் எண்ணிக்கை | 107 |
| **24** | பால் பவுடர் பண்ணைகள் (ஈரோடு, சேலம், மதுரை மற்றும் தருமபுரி) | 4 |
| **25** | பால்பவுடர் உற்பத்தித்திறன் | 70டன்/நாள் |

## அட்டவணை—8

### மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களின் பால் கொள்முதல்

### (நாளொன்றிற்கு சராசரி)

| வ. எண் | ஒன்றியத்தின் பெயர் | 2011—2012 (லிட்டரில்) |
|---|---|---|
| 1 | காஞ்சிபுரம்— திருவள்ளூர் | 56,000 |
| 2 | விழுப்புரம் | 1,52,000 |
| 3 | வேலூர் | 2,52,000 |
| 4 | தருமபுரி | 1,09,000 |
| 5 | சேலம் | 4,23,000 |
| 6 | ஈரோடு | 2,31,000 |
| 7 | கோயம்புத்தூர் | 2,30,000 |
| 8 | நீலகிரி | 17,000 |
| 9 | மதுரை | 1,68,000 |
| 10 | திண்டுக்கல் | 40,000 |
| 11 | திருச்சி | 2,94,000 |
| 12 | தஞ்சாவூர் | 42,000 |
| 13 | புதுக்கோட்டை | 14,000 |
| 14 | சிவகங்கை | 33,000 |
| 15 | விருதுநகர் | 12,000 |
| 16 | திருநெல்வேலி | 58,000 |
| 17 | கன்னியாகுமரி | 9,000 |
| | மொத்தம் | 21,40,000 |

அட்டவணை—9

**மாவட்ட ஒன்றியங்கள் மற்றும் சென்னை மாநகர பால் விற்பனை**

| வ. எண் | ஒன்றியத்தின் பெயர் | 2011—2012 (நாளொன்றுக்கு லிட்டரில்) |
|---|---|---|
| 1 | காஞ்சிபுரம்—திருவள்ளூர் | 7,560 |
| 2 | விழுப்புரம் | 30,086 |
| 3 | வேலூர் | 87,847 |
| 4 | தருமபுரி | 21,690 |
| 5 | சேலம் | 1,76,854 |
| 6 | ஈரோடு | 79,371 |
| 7 | கோயம்புத்தூர் | 1,58,175 |
| 8 | நீலகிரி | 16,543 |
| 9 | மதுரை | 1,46,605 |
| 10 | திண்டுக்கல் | 15,155 |
| 11 | திருச்சி | 1,11,284 |
| 12 | தஞ்சாவூர் | 19,529 |
| 13 | புதுக்கோட்டை | 6,830 |
| 14 | சிவகங்கை | 27,605 |
| 15 | விருதுநகர் | 10,623 |
| 16 | திருநெல்வேலி | 48,818 |
| 17 | கன்னியாகுமரி | 13,825 |
| | மொத்தம் | 9,78,400 |
| 18 | சென்னை மாநகர பால் விற்பனை | 10,57,000 |
| | ஆக மொத்தம் | 20,35,400 |